[1973 நவம்பர் 19

B&C மில்லிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர்

***161** வினா—**திருமதி த. ந. அனந்தநாயகி**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) B & C மில்லிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் கூவம் ஆற்றில் விழுவதுடன் எண்ணூர் பகுதியிலும் செல்வதால் அப்பகுதியிலுள்ள மீன்கள் செத்து விடுகின்றன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப்: பொதுவாக சுற்றுப்புற சூழ்நிலையை சுத்தப்படுத்த மத்திய சர்க்கார் ஒரு கமிட்டி அமைத்திருப்பதாக அறிகிறோம். அப்படி இருக்குமானால் அதன்மூலம் சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சுத்தப்படுத்த திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: காற்றுத் தூய்மை கெடுதல், நீர்த் தூய்மை கெடுதல் ஆகியவற்றைக் கவனிக்க அரசாங்கத்தில் ஒரு குழு இருக்கிறது. நகரில் அதற்குரிய நடவடிக்கைகள் முடிந்த அளவுக்கு நிறைவேற்றப் படுகின்றன. பி. அண்டு சி. மில்லில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் கூவம் ஆற்றில் கலக்கப்படுகிறதா என்பது கேள்வி. அதுதான் இல்லை என்று சொன்னேன். கார்ப்பரேஷன் சூவேஜிலும், பக்கிங்ஹாம் கால்வாயிலும்தான் கலக்கப்படுகிறது.

திருச்சி டிஸ்ட்லரீஸ் அண்ட் கெமிகல்சிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர்

***162. வினா—திரு. என். கிட்டப்பா**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள 'டிஸ்ட்லரீஸ் அண்ட் கெமிகல்ஸ்' தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருளினால் தண்ணீரும் காற்றும் அசுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கான திட்டம் ஏதேனும் மாவட்ட ஆட்சியாளரால் அண்மையில் அனுப்பப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் **யாவை?**

1973 நவம்பர் 19]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) திருச்சி டிஸ்ட்லரீஸ் அண்ட் கெமிக்கல்ஸ் நிறுவனமானது, நீர் மற்றும் சாக்கடை கழிவை தூய்மைப்படுத்துதல் பற்றிய குழுவின் பரிந்துரைப் படி, கழிவு நீர் சம்பந்தமான திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது. இந்த நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரை அப்பகுதியில் விவசாய பாசனத்திற்குப் பயன்படுத்துதல் பற்றி திருச்சி மாவட்ட ஆட்சியாளர் தெரி வித்த கருத்தை அதிலுள்ள சில இடர்ப்பாடுகள் காரணமாக பிறகு கவனிக்க லாம் என்று தலைமைச் செயலரின் தலைமையில் கூடிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் சில இடர்ப் பாடுகள் இருப்பதாக அறிவித்தார்கள். அத்தகைய இடர்ப்பாடுகள் என்ன என்பதையும் அவைகள் எப்பொழுது தவிர்க்கப்படும் என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது முடியுமா என்றே தெரியவில்லை. காரணம் அங்கிருந்து வெளி வரக்கூடிய கழிவு நீரை மாத்தூர் என்ற கிராமத்திற்கு—பல மைல் தூரம்—கொண்டு சென்று நெல் விளைச்சலுக்குப் பயன்படுத்தலாமா என்று ஆலோசனை செய்யப்பட்டது. எவ்வளவு செலவாகும் என்று ஆலோசனை செய்யப்பட்டு, முதலீட்டுக்குத் தேவைப்படும் தொகை ரூபாய் ஒரு கோடியே நாற்பது லட்சம் என்றும் ஒவ்வொரு ஆண்டும் அதை நிர்வகிக்க ஆகும் செலவு ரூபாய் பதின்மூன்று லட்சம் என்றும் அதன்மூலம் விளைகிற அரிசியின் அடக்க விலை ஒரு டன்னுக்கு ரூ. 8,000 ஆகும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வளவு முதலீடு தேவை யாகும் என்பதை எண்ணிப்பாராது சொல்லப்பட்ட ஆலோசனை என்பதால் தான் அது இயலாத காரியம் என்று நான் கருதுகிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, இந்த டிஸ்டிலரீஸ் பிரச்சினை நெடு நாளாக இருந்து வருகிற ஒன்று. ஆகவே, அதிலிருந்து வெளியாகும் கழிவு நீரை அதிகமாக சூடுபடுத்தி ஆவியாகும் திட்டத்தை அரசு செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன ஆலோசனை குறித்து. அது நிறைவேற்றப் படக் கூடியதாக இல்லை. ஆனால், அந்தத் தொழிற்சாலையிலே இருந்து வெளி

வருகிற கழிவு நீரை சுத்தப்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருக்கிற ஒரு திட்டம் ஏறத்தாழ ஒரு ஆண்டிற்கு முன்னால் எடுத்துக்கொள்ளப்பட்டு, 2/3 பங்கு கடமைகள் நிறைவேறியிருக்கின்றன. மிச்சப் பகுதியை டிசம்பருக்குள்ளாக முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. நீரேற்றக் கருவிகளை நிறுவி இத்திட்டத்தை இவ்வாண்டு டிசம்பர் 31-ம் தேதிக்குள் முடிக்குமாறு இத்திட்டத்தை நிறைவேற்ற அமைக்கப்பட்ட குழு உத்தரவிட்டுள்ளது. அதை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அந்தக் கழிவு நீரை சீர்செய்வதற்காக ரூ. 75 இலட்சம் செலவிலே ஒரு திட்டத்தை பரிந்துரை செய்திருப்பதாக நான் அறிகிறேன். அந்த மாதிரி கழிவு நீரை சீர் செய்ய திட்டங்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களுக்கும், அங்கு போகிறவர்களுக்கும் அக்கழிவு நீர் இப்பொழுதும் தொல்லையாக இருக்கிற காரணத்தால் உடனடியாக அதற்கு வேண்டிய 'ஃபாலோ-அப் ஆக்ஷன்' எடுத்து, ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது திருவரும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரால் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டு 1½ ஆண்டிற்கு முன்னரே தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் இணைக்கப்பட்டு தொடர்ந்து பரிசீலனை செய்து 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டம் கூட்டி நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கை விரைவிலே வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் கழிவு நீரை நெல் விளைச்சலுக்குப் பயன்படுத்தலாமா என்பதுபற்றியும் அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். ஆனால் கெமிக்கல்ஸ் போன்ற தொழிற்சாலைகளிலிருந்து வெளி வருகிற கழிவு நீரால் விவசாயம் கெட்டுப் போய் பல ஏக்கர்கள் நாசம் ஆகி இருக்கின்றன. அம்மாதிரி இடங்களிலே அந்நீரை சுத்தப்படுத்துவதற்கு அல்லது அதனால் நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நஷ்டஈடு அளிப்பதால் பிரச்சினைகள் தீராது. அதற்குப் பதிலாக சுத்தப்படுத்துகிற காரியத்திற்குத்தான் நமது சக்தி முழுவதையும் பயன்படுத்தி நிறைவேற்றியாகவேண்டும். இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையிலும் கட்டாய விதிகள் ஏற்படுத்தப்பட்டு நிறைவேற்ற சில காலம் தேவைப்பட்டது. இப்பொழுது நிறைவேறி வருகிறது. விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், கழிவு நீர் தேங்குவதற்கு

[1973 நவம்பர் 19]

3 ஆரம்ப தேக்கங்கள், அதற்குப் பின்னர் மூன்று இரண்டாவது கட்ட தேக்கங்கள் ஏற்படுத்த வேண்டும். அங்கு கழிவு நீரின் தரம் மாற்றப்படும். பிறகு இரண்டு திறந்த வெளி தேக்கங்கள் அமைத்து அதற்குப் பின்னர் நீரேற்றுக் கருவிகளை அமைத்து மற்ற தண்ணீரை கலக்குகிறபொழுது, கழிவு நீரின் அசுத்தத்தின் விகிதாசாரத்தைக் குறைத்து அதன்மூலம் கெடுதல் தவிர்க்கப்படுவதற்கு வழி செய்யப்பட்டு வருகிறது.

Sub-Registry Office for Tiruvalangadu.

* 163 *Q*.—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to open a Sub-Registry Office at Tiruvalangadu in Tiruttani taluk; and

(*b*) if so, when it will be opened ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, திருத்தணி வட்டத்தில் 4 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில் 3 ஊராட்சி ஒன்றியங்களில் சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. திருவாலங்காட்டில் மட்டுமில்லை. ஆகவே, அங்கு ஒரு அலுவலகம் உருவாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, ஒரு சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட அதற்கு 1,500 பதிவுகள் இருக்கவேண்டும். ஆனால், திருவாலங்காட்டில், 1,284 பதிவுகள்தான் பதிவு செய்யும் நிலையிலிருக்கிறது. எனவே, முதலில் குறிப்பிட்ட நிலையை அடையும்போது அரசு இதனைப் பரிசீலனை செய்யும்.

Buildings for Government Offices in Madras.

* 164 *Q*.—Thiru N. K. PALANISWAMY :
Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct buildings to house the Government Offices in the City of Madras now functioning in rented buildings ; and

(*b*) the amount of monthly rent paid for these offices at present ?